செ.வெ.எண்.64 நாள்.04.02.2018.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, வ.உ.சி. மைதானத்தில் ‘‘நெல்லை புத்தகத் திருவிழா’’ கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் ‘‘நெல்லை புத்தகத் திருவிழா’’ கலை நிகழ்ச்சிகள் தொடக்க விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.02.2018) நடைபெற்றது. விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, புத்தகத் திருவிழா கலை நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார். மேலும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் பாடல் எழுதி, இசையமைக்கப்பட்ட நெல்லை கீதம் இசைத் தொகுப்பினை வெளியிட்டார்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாநகரில் புத்தகத் திருவிழா நடத்துவது மிகப்பெருமையான ஒன்றாகும். உலகில் எல்லா செயல்களையும் விட உயர்ந்தது அறிவு பசியை போக்குகின்ற புத்தகத் திருவிழா நடத்துவதுதான் மற்ற நிகழ்ச்சிகளை கலந்து கொள்வதை விட புத்தகத் திருவிழாவில் கலந்து கொள்வதை நான் பெருமையாக கருதுகிறேன். எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் திருவிழா ‘‘புத்தகத் திருவிழா’’ தான். ஆங்கிலம் வணிக மொழி, உருது கவிதை மொழி, சமஸ்கிருதம் வேதம் மொழி, சீனம் குறியீட்டு மொழி, தமிழ்தான் உலகிற்கே தாய் மொழியாகும்.

சென்னையில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் ரூ.15 கோடி அளவிற்கு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். புத்தகம் வாங்குவது செலவு அல்ல. அது அறிவிற்கு செய்யும் மூலதனமாகும். நமது அறிவுக் கண்ணை திறப்பது நல்ல நூல்கள் தான். கல்லில் சிற்பம் செதுக்குவதைப் போல களிமண்ணில் குயவன் மண்பாண்டம் செய்வததைப் போல நல்ல நூல்கள் நம்மிடம் உள்ள தேவையில்லாதவற்றை செதுக்கி, தேவையானவற்றை சேர்த்து, நம்மை அறிவு பாத்திரமாக மாற்றும். நாம் தினந்தோறும் நூலகங்களுக்கு செல்ல வேண்டும். குறைந்தது ஒரு பதினைந்து நிமிடமாவது புத்தகங்களை படிக்க வேண்டும். ஒரு நல்ல நூல் சிறந்த நண்பனுக்கு சமமாகும். நல்ல நூல் எழுதி முடிக்கப்பட்டால் ஒரு சிறைச்சாலையின் கதவு மூடப்பட்டதற்கு சமமாகும் என்ற வைர வரிகளை எண்ணிப்பார்க்க முடிகிறது. திருக்குறள், இராமயாணம், மகாபாரதம் உள்ளிட்ட பலம்பெறும் புராணங்கள் அறத்தை பற்றி, வாழ்க்கை முறையினை பற்றி, சகோதர பாசத்தினை பற்றி, மனிதநேயத்தினை பற்றி நமக்கெல்லாம் தெரிவிக்கின்றன.

வாழ்வில் எது முக்கியம் என பட்டியல் போட்டால், உறவுகள் முக்கியம் உலகில் வாழ, உணர்வுகள் முக்கியம் அறிவு வளர, உயர்வுகள் முக்கியம் உதாரணமாய் வாழ, கனவுகள் முக்கியம் மகிழ்வுடன் வாழ, நண்பர்கள் முக்கியம் நலமுடன் வாழ, கொள்கைகள் முக்கியம் புகழுடன் வாழ, இலக்குகள் முக்கியம் இன்பமாக வாழ, புத்தகங்களின் முக்கியம் மொத்தத்தில் மனிதனாய் வாழ. வாழ்க்கை எனும் பூட்டை திறக்கும் சாதி புத்தகமாகும். நாம் வாழ்க்கையின் மேலான நிலையை அடைய உறுதுணை புரிவது புத்தகங்களே ஆகும். நமது நெல்லைக்கு பெருமைச் சேர்க்கும் புத்தகத் திருவிழா சிறப்பாக நடத்திட ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.

விழாவிற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பேசியதாவது–

திருநெல்வேலியில், நேஷனல் புக் டிரஸ்ட் மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து, புத்தகத் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருநெல்வேலியில், புத்தகத் திருவிழா நடத்த வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. புத்தகத் திருவிழா சிறப்பாக நடத்திட இரண்டு மாதத்திற்கு முன்பே திட்டமிடப்பட்டு, நடத்தப்படுகிறது. புத்தகத் திருவிழாவில் 110 புத்தக அரங்குகளும், சுமார் 10 இலட்சம் புத்தகங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு அரங்குகளாக சித்தா, தூய்மை பாரதம் தொடர்பான அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நமது மாவட்டத்தின் பெருமையை சொல்லும் வகையில், மண்பாண்டபம், பத்தமடை பாய், கல்லிடைக்குறிச்சி அப்பளம் உள்ளிட்டவைகளுடன் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்களின் புத்கக வாசிப்பினை ஊக்கப்படுத்தும் வகையில், சுத்தம் புத்தகம் தரும் எனும் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் தேர்வு செய்யப்பட்டுள்ள பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் வழங்கப்படவுள்ளது. இளைய தலைமுறையினர் மொபைல், கணினி மூலம் படிப்பதை விட கையில் புத்தகங்களை வைத்து படிப்பது, ஆனந்தம் என்பதை உணரும் வகையில் விழா நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து, நெல்லை புத்தகத் திருவிழா நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், எழுத்தாளர்களின் உரை நிகழ்ச்சிகளும் தினசரி நடத்தப்படவுள்ளது. புத்தக கண்காட்சி வரும் அனைவரும் ஒரு புத்தகமாவது கண்டிப்பாக வங்கிச் செல்ல வேண்டும். உங்களின் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் 11.02.2018 வரை புத்தகத் திருவிழா நடைபெறுவதை எடுத்துச் சொல்ல வேண்டும். இங்கு அதிகமான பொதுமக்கள், மாணவ, மாணவிகள், புத்தக வாசிப்பாளர்கள் வருகை தந்து அதிகமான புத்தகங்களை பெற்று, புத்தகத் திருவிழாவினை சிறப்பிக்க வேண்டுமென பேசினார்.

இவ்விழாவில், பள்ளி மாணவ, மாணவிகள் திருநெல்வேலியின் பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்லும் நெல்லை கீதம் பாடலுக்கு சிறப்பாக நடனமாடினர். முன்னதாக, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் புத்தகத் திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார்.

இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.செல்வமோகன்தாஸ்பாண்டியன், திரு.அ.மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ப.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமலினி, டான்பெட் துணைத் தலைவர் திரு.கண்ணன்(எ) ராஜீ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெல்லை கூட்டுறவு பேரங்காடித் தலைவர் திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை, திருநெல்வேலி–தூத்துக்குடி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம், முக்கிய பிரமுகர்கள் திரு.பரணி சங்கரலிங்கம், திரு.ஜெரால்டு மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.